# விசுவாசமும் தேவனுடைய கிருபையின் ஆசீர்வாதமும்

தேவனுடைய இரட்சிக்கும் கிருபைக்குள் நாம் சென்று சேரக் கூடிய வழியானது விசுவாசத்தின் மூலமாக நமக்கு வருகின்றது: *"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டு கிறோம்"* (ரோமர் *5:1, 2*). கிருபைக்குள் விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்த நிபந்தனையின் பேரிலேயே பிரவேசிக்க முடியும்; மற்றும் விசுவாசமானது செயல் மூலமாகவே நிறைவடைகின்றது (யாக். *2:22*).

கிருபையானது கிறிஸ்துவுக்குள் இருக்கின்றது (*2* தீமோ. *2:1*), நாம் ஞானஸ்நானத்தின் மூலமாக அவருக்குள் பிரவேசிக்கின்றோம் (ரோமர் *6:3*). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது விசுவாசத்தின் மூலமாகக் கிருபையினுள் பிரவேசிக்கின்றோம், மற்றும் - கிருபை இருக்கும் இடமான - கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்றோம். ஞானஸ்நானம் பெறும் வேளை யானது நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும் வேளையாக இருப்பதால், அவ்வேளையே நமது இரட்சிப்பைக் கொண்டு வருகின்ற தேவகிருபைக் குள் நாம் பிரவேசிக்கும் வேளையாகவும் இருக்க வேண்டும் (எபே. *2:8*).